


# ரமலான் சந்தைகளில் முறைகேடுகள் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்

**கோலாலம்பூர், பிப். 27-**
**தங்களுக்கு ஒதுக்கப்படுகின்ற வர்த்தக பகுதிகளை கூடுதல் வாடகைக்கு விடுகின்ற வர்த்தகர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கப்படுகிறது.**

புனித நோன்பு மாதத்தை முன்னிட்டு கோலாலம்பூர் மாநகரின் பல்வேறு பகுதிகளில் ரமலான் சந்தைகள் அமைக்கப்படுகின்றன.

இந்த சந்தைகளில் குறிப்பிட்ட வர்த்தகர்களுக்கு இடம் ஒதுக்கப்படுகிறது. ஆனால் அதனை அவர்கள் தவறாக பயன்படுத்துகின்றனர்.

கடந்த காலங்களில் இதே போன்ற தவறுகள் குறித்து புகார்கள் கிடைத்திருக்கின்றன.

எனவே இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி கோலாலம்பூர் மாநகராட்சி மன்ற அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக பிரதமரின் அரசியல் செயலாளர் அஸ்மான் அபிடின் தெரிவித்தார்.

தங்களுக்கு ஒதுக்கப்படுகின்ற இடங்களை மற்றவர்களுக்கு குறிப்பாக வெளிநாட்டவர்களுக்கு அதிக வாடகைக்கு விடுகின்ற வர்த்தகர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். இந்த ரமலான் சந்தைகளின் போது சோதனைகள் நடத்தப்படும்.

தவறு புரியும் வர்த்தகர்களின் உரிமங்கள் உடனடியாக ரத்து செய்யப்படும் என்றும் அவர் எச்சரித்தார்.